# மனஉருக்கத்தோடு ஜெபம் செய்யுங்கள்

**1 தீமோத்தேயு 2:1**

**நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;**

கிறிஸ்து வழியாக உண்டான இரட்சிபை அடைய முன்னதாக, ஒருவன் எப்படிப்பட்ட சன்மார்க்கானவோ, பெரும் கல்விமானாகவோ, சமுக அந்தஸ்தும் செல்வாக்குடையவானவோ, மத வைராக்கியமுடையவனாகவோ அல்லது அவன் எப்படிப்பட்ட மேன் மக்களின் வர்க்கத்தை சேர்ந்தவனாக இருந்தாலும், அவன் முற்காலத்திலே பாதாளத்தின் வல்லடிக்கு உட்பட்டவனாக இருந்தான். "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல", இது தேவனுடைய ஈவு என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே நம்மிடத்தில் வெளிப்பட்ட தேவ அன்பு, அவருடைய தயவு, இரக்கம், கிருபையின் மேன்மையை ஒருபோதும் மறந்து போய்விடாதிருங்கள். சில வேளைகளிலே, சீர்திருத்தங்கள் செய்யும் பொறுப்பு உங்களிடத்தில் இருக்கலாம். தேவனுக்கு முன்பாக முகதாட்சணியம் இல்லாமலும திருத்தங்கள் செய்யபப்பட வேண்டும். கண்டிப்பும் கடிந்து கொள்ளுதலும் இருக்க வேண்டும். தேவ நீதியானது நடத்தப்பட வேண்டும். ஆனால், தேவ பிள்ளைகளின் குணாதிசயங்களான, அன்பு, தயவு, இரக்கம் போன்றவற்றை மறந்து போய்விடாதிருங்கள். பாவங்கள் கண்டித்து உணர்த்தப்பட வேண்டும். ஆனால், ஒருவன் பெலவீனத்திலால் மடிந்து, பின்மாற்றக்காரனாக மாறி, தன் வாழ்வை அழித்துக் கொள்ள கூடாது என்ற மனப்பாரத்துடன் அவனுக்காக ஜெபிக்க வேண்டும். நம்முடைய இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசு, பிதாவின் வலது பாரிசத்திலிருந்து, உங்களுக்காகவும், எனக்காகவும் பரிந்து பேசிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் அவருடைய சீஷர்களானால், அவரைப் போல, மற்றவர்களுக்காக வேண்டும் செய்கின்றவர்களாக இருங்கள்.

**ஜெபம்:** மனதுருகின்ற தேவனே தேவனே, நீர் என்மேல் காட்டின இரக்கம் பெரியது. அதுபோலவே நானும் இரக்கமுள்ளவானக இருந்து, மற்றவர்களுக்காக ஜெபம் செய்யும் உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பொறுப்புக்ளை நிறைவேற்றுதல்

இந்த உலகிலே சட்டங்கள், ஒழுங்கு முறைகள், அதிகாரங்கள் ஏற்படு த்தப்பட்டிருக்கின்றன. எடுத்துக் காட்டான, வீட்டிலே தாய் தந்தையருக்கு தங்கள் பிள்ளைகள்மேல் அதிகாரங்கள் உண்டு. அதனால், அவர்களை எப்போதும் அடித்து தண்டிப்பது சரியாகுமோ? ஒயாமல் பிள்ளைகளை கடிந்து கொண்டிருப்பது பெற்றோரு க்கு ஏற்புடைய பண்பு ஆகுமா? பிள் ளைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்று வேதத்திலே தெளிவாக கூறப் பட்டுள்ளது. எனினும், தேவன் அறிந் தும், தேவனோடு வாழாமல், தன் கண் போன வழியில் நடக்கும் ஒரு தகப்பன், பிள்ளைகளுடைய விஷய த்திலே வேதம் இப்படி சொல்கின்றது என்று தன் மகனை அடித்து திருத்துவது எப்படியாக இருக்கும்? நாம் பொறுப்புகளில் இருக்கும் போது, தேவனோடுள்ள நம்முடைய உறவு உறுதியாக இருக்க வேண் டும். அனுதினமும் வேதத்தை வாசித்து, தியானித்து, ஜெபிக்கி ன்றவ ர்களாக இருக்க வேண்டும். அப்போது, தேவ ஆவியானவர், ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் என்ன செய்ய வேண்டும் என்று உணர்த்துவார். சகல சத்தியதிலும் வழிநடத்துவார். நான் அதிகாரத்திலே இருக்கிறேன், எனக்கு இத்தனை வருட அனுபங்கள் இருக்கின்றது என்று, தேவ வழிந டத்துதலை எந்த அதிகாரியும் தள்ளிவிட முடியாது. இப்படியாகத்தான், அக்காலத்திலே வாழ்ந்த பரிசேயர்கள், வேதபாரகர்களில் பலர், தாங் கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் என்று எண்ணி, உணர்வற்றவ ர்களாக, தங்களுக்கு கொடுக்கப்கட்ட அதிகாரங்கள் துஷ்பிரயோம் செய்தார்கள். பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளைக் குறித்து அதி காரம் உண்டு. பிள்ளைகள் நல் வழயிலே நடப்பதற்கு அந்த அதிகாரம் மாத்திரம் போதாது. “கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிற வன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடி யைப்போல் இருப்பாள் உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.” எனவே நீ அதிகாரமுள்ளவனாக இரந்தால், முதலாவதாக கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நட. அப்பொழுது நீ ஞானமுள்ளவனாய் நடத்து கொள் வாய்.

**நீதிமொழிகள் 1:7**

**கர்த்தருக்குப் பயப்படு தலே ஞானத்தின் ஆரம் பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட் டை பண்ணுகிறார்கள்.**

**ஜெபம்:** சகலமும் அறிந்த தேவனே, நான் எல்லா சூழ்நிலைகளிலும், உமக்கு பயந்து உம்முடைய வார்த்தையின்படி நடக்க எனக்கு உணர்வள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக.. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காலத்திற்கு முந்தின தீர்ப்பு

அமித்தாயின் குமாரனாகிய யோனா என்னும் தீர்க்கதரிசியின் நாட்களிலே, தேவனாகிய கர்த்தர்தாமே, யோனா வழியாக நினிவே என்னும் மகா நகரத்தின் முடிவைக் குறித்து செய்தியை அனுப்பி வைத்தார். அவர்களுடைய அக்கிரமம் மிகுதியாக இருந்ததால், இன்னும் நாற்பதுநாள் உண்டு அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை அறிவித்தான். அந்த மகா நகரத்தின் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இரு க்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவு ங்கடவர்கள். யாருக்குத் தெரியும் நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருசே வளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிர கோபத்தை விட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். ஆனால், கர்த்தருடைய தீர்க்கதரிசியோ, தான் தீர்க்கதரிசனம் உரைத்தபடி, இன்னும் நாற்பது நாளிலே, மகா நகரத்தின் அழிவை தன் கண்களால் காண வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக் கொண்டான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். அந்த ஜனங்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொண்டார்கள். ஆனால் கர்த்தருடைய தீர்க்கதரிசியானவனோ, ஜனங்கள் மனந்திரும்பி, வாழ வேண்டும் என்பதைப் பார்க்கிலும், தன் வழியாக உரைக்கப் பட்ட வார்த்தைகள் நிறைவேற வேண்டும் என்பதே அவனுடைய நோக்கமாக இருந்தது. இன்றும் இப்படியப்பட்ட மனநிலையுடையவர்களை அங்காங்கே காண்கின்றோம். நாம் அப்படியாக எண்ணம் கொள்ளாமலும், காலத்திற்கு முன்னதாக தீர்ப்பை வழங்காமலும், கர்த்தரை அறிகின்ற அறிவிலே தினமும் வளர வேண்டும். அவரைப் போல நாம் மாற வேண்டும். அவர் எப்படி மனந்திரும்புதலை விரும்புகின்றாரோ நாமும் அதை விரும்ப வேண்டும். மன்னிப்பை கொடுக்க பழக்கிக் கொள்ள வேண்டும். இவ்வண்ணமாகதேவசாயலிலேநாம்தினமும்வளர்ந்து பெருக வேண்டும்.

**1 கொரிந்தியர் 3:5**

**ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்;**

**ஜெபம்:** மனந்திரும்புதலை விரும்புகின்ற தேவனே, நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனாக இருப்பதால் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

சனி | ஒக்டோபர் 4

📖 மாலை வாசகம் – சங்கீதம் 37:1 – 6

# நீதியுள்ள நியாயாதிபதி ஒருவரே

தாவீது ராஜா எப்போதும் தேவனையே சார்ந்து வாழ்ந்து வந்தார். அவர் பாவம் செய்தேன் என்று உணர்ததப்படும் போது, தன்னை தேவனுக்பு முன்பாக தாழ்த்தி, கண்ணீரோடு மனந்திரும்பினார். அவருடைய வாழ் நாட்களிலே, பல ஆண்டுகளாக அவரை எதிர்த்து நிற்பவர்களால் துன்பப்பபடுத்துதப்பட்டார். நியாத்தீர்ப்பை தன் கரங்களிலே எடுத்துக் கொள்ளாமல், தன் ஆத்துமாவை சத்துருவின் கையில் நின்று விடுவிக்கும்படி தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணினார். அவர் தேவனை நோக்கி: "கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ்செய்வார் கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும். துன்ம ார்க்கனுடைய பொல்லாங்கை ஒழியப்பண்ணும் நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக. நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்த றிகிறவர். செம்மையான இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது. தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார் அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அவனுக்கு மரணாயுதங்களை ஆயத்தம்பண்ணினார் தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்கினார். இதோ, அவன் அக்கிரமத்தைப் பெறக் கர்ப்பவேதனைப்படுகிறான் தீவினையைக் கர்ப்பந்தரித்து, பொய்யைப் பெறுகிறான். குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான் தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பும், அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும். நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன்." என்று பாடித் துதித்தார். நம்முடைய வாழ்க்கையிலும் நாம் நம்முயை புய பலத்திலே, நம்முடைய அறிவிலே தங்கி வாழாமல், மற்றவர்கள் அநியாயமாக நம்மை துன்பப்பபடுத்தும் வேளைகளில் நம்முடைய பெலத்தின்படி தீர்ப்பு செய்ய முற்படாமலும், தேவனை நோக்கி நீடிய பொறுமையோடு காத்திருக்க பழகிக் கொள்ள வேண்டும். தேவன் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி. நம்முடைய கோபம் தேவனுடைய நீதியயை நடப்பிக்காது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**சங்கீதம் 5:12**

**கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்வீர்.**

**ஜெபம்**: நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்ளும் தேவனே, நியாத்தீர்ப்பு செய்வதை என் கரத்தில் எடுத்துக் கொள்ளாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஏதாவது செய்ய வேண்டும்!

ஆண்டவராகிய இயேசு, பரலோகத்திற்கு எழுந்தருள முன்னதாக, தம்முடைய சீஷர்களை நோக்கி: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்". அந்த வார்த்தையை கேட்ட சீஷர்கள், ஆண்டவர் இப்படியாக கட்டளையிட்டிருக்கின்றார் எனவே நாங்கள் உடடினடியாக புறப்பட்டுப் போய், சுவிசேஷத்தை காண்கின்ற யாவருக்கும் அறிவிப்போம் என்று பிரயாணப்பட்டு போனார்களா? இல்லை. ஆண்டவர் மேலும் கூறுகையில்: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான் நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்." பரிசுத்த ஆவியானவர் வந்தபோது, அவர்களை அவர் சகல சத்தியத்திலும் வழிநடத்தினார். எங்கு செல்ல வேண்டும்? எப்போது செல்ல வேண்டும்? யாரை சந்திக்க வேண்டும்? என்ன சொல்ல வேண்டும்? என்று திட்டமாவும் தெளிவாகவும் வழிநடத்தினார். கிறிஸ்துவின் சுவிசேஷம் அல்லது கிறிஸ்துவின் நற்செய்தியானது அறிவிக்கப்பட வேண்டும். எனவே நாம் அதை நம்முடைய விருப்பப்படியும், நம்முடைய உணர்வுகளின்படியும் செய்யலாமா? இல்லை. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு நாம் கிறிஸ்துவின் இரட்சிப்பின் செய்தியாகிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும். அப்படியாக தேவ வழிநடத்துமதல் இல்லாமல், நாம் செயற்படுவோமாக இருந்தால், நாம் சுவிசேஷம் அறிவிப்பதற்கு தடையானவர்களாக மாறிவிடுவோம். எனவே, ஏதாவது, ஏதாவது செய்ய வேண்டும் என்று குழப்பங்களை ஏற்படுத்திவிடாமல் சத்தி ஆவியானவருடைய வழிநடத்துதலோடு, நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டில், அதனால் ஏற்படும் பின்விளைவுகளை குறித்து, ஆண்டவராகிய இயேசுதாமே மலைப்பிரசங்கத்திலே 7ம் அதிகாரம் ஆறாம் வசனத்திலே கூறியிருக்கின்றார். அந்த வசனத்தை இந்நாட்களிலே தியானம் செய்வோம்.

**யோவான் 14:16**

**என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**ஜெபம்**: அன்பின் பரலோக தேவனே, என்னுடைய விருப்பப்படி உம்முடைய சித்தத்தை செய்ய முயற்சிசெய்யாமல், உம்முடைய சித்தம் சம்பூரணமாக என்னில் நிறைவேற நான் இடம் கொடுக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவியானவரின் வழிடத்துதல் தேவை

ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று ஆண்டவராகிய இயேசு தாமே தம்முடைய சீஷர்களுக்கு கட்டளையிட்டார். பிதாவாகிய தேவன் முன் குறித்த பெந்தேகோஸ்தே என்னும் நாளிலே பரிசுத்த ஆவியானவர் வந்தார். சீஷர்கள் யாவரும் வெளியரங்கமான அடையாளங்களோடு, பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்டார்கள். அதனால், அவர்கள் தங்கள் இஷ்டப்படி, பிரயா ணப்பட்டுப்போய், நற்செய்தியை அறிவித்தார்களா? இல்லை! பெற்றுக் கொண்ட ஆவியானவரின் வழி நடத்துதலின்படியே அவர்கள் நற்செய்தியை அறிவித்தார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும்படி, அதிகமாக பிரயாசப்பட்ட தேவ ஊழியராகிய பவுல், ஒரு சமயம், இன்னும் சிலரோடுகூடி, "பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள் ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்." (அப் 16:4-7). இன்னுமொரு சந்தர்ப்பத்திலே, பிலிப்பு என்னும் ஊழியனை, ஆவியானவர் வழிநடத்தினார். எத்தியோபாவிலிருந்து வந்த மந்தரியை சந்ததிக்கும்படி அவனை கூடிப்கொணட்டு போய், அந்த மந்திரியானவர் சென்றுகொண்டிருந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று அவனுக்கு சொன்னார். அவனும் அந்த மந்திரியை சந்தித்து, நற்செய்தியை கூறி, அவருக்கு அன்றய தினமே ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். பிலிப்பு ஆசோத்திலே காணப்பட்டு, அவ்விடத்திலிருந்து பிரயாணம் பண்ணி செசரியாவுக்கு வருகிறவரையில் சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு வந்தான். இந்த சம்பவத்தை அப்போஸ்தல நடபடிககள் 8ம் அதிகாரம் 26ல் இருந்து 40ம் வசனம் வரை வாசிக்கலாம். எனவே சகல சத்தியத்திலும் நம்மை வழிநடத்தும் சத்திய ஆவியானவருடைய சத்தத்திற்கு செவி கொடுங்கள். தேவன் குறித்த காலத்திற்கு முன்னதாகவே, தேவ காரியங்களை செய்ய முற்படாதிருங்கள்.

**அப்போஸ்தலர் 8:29**

ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார்.

**ஜெபம்:** நான் செய்ய வேண்டியவைகளை எனக்கு போதிக்கும் தேவனே, நான் உம்முடைய சத்தத்திற்கு செவி கொடுத்து, உம்முடைய வழியிலே நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# காலமும் அழைப்பும்

ஒரு கிரமாத்தின் எல்லைகளுக்கு அப்புறமாக சில வீணர்களான துஷ்டர்கள் கூடியிருப்பதை அந்த ஊரின் குடிகளல் சிலர் கண்டு கொண்டார்கள். அவர்களை கண்டவர்கள் சத்தம் ஏதும் போடாமல் சென்று அந்த செய்தியை கிராமத்தின் மூப்பர்களுக்கு அறிவித்தார்கள். அந்த துஷ்ட மனிதர்கள் இன்னும் கிராமத்திற்குள் உட்புகாமல், கிராமதிற்கு அப்புறமாவே இருந்து, குடித்து வெறித்து, தங்கள் களியாட்டங்களை நடப்பித்துக் கொண்டிருந்த்ர்கள். அதைக் குறித்து, கிராமத்தின் மூப்பர், அரச அதிகாரிகளிடத்தற்கு துரிதமாக செய்தி அனுப்பினார்கள். அந்த அதிகாரிகளும், அந்த இடத்திற்கு ஆயத்ததோடு வரும்படி துரிமாக செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த வேளையிலே, அந்த கிராமத்திலே இருந்த சில வாலிபர்கள் அதிகாரிகள் வர காலமாகும். எங்களுக்கு அறிவுண்டு, பெலம் உண்டு, நாங்கள் சென்று அவர்களோடு பேசுவோம், அறிவுரை கூறுவோம் என்று அந்த இடத்திற்கு சென்றார்கள். அவர்களை நோக்கி: இது மக்கள் குடும்பங்களோடு வாழும் இடம். நீங்கள் இப்படிய செய்வது உங்களுக்கொ மற்றவர்களுக்கோ நன்மை உண்டாக்காது. எனவே உங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். வெறிகொண்ட அந்த துஷ்டர்கள், மூரக்கங் கொண்டு, அவர்கள் அடித்து, கிராமத்தின் எல்லைகளை உடைத்து, உட்புகுந்து அங்கிருந்த சில வீடுகளை உடைத்து, அநேகரை அடித்து கொள்ளையத்து சிலரை பணயக்கைத்திகளாக்கி கொண்டார்கள். கருப்பொருளாவது எல்லாவற்றிற்கும் தேவன் குறித்த ஒரு காலம் உண்டு. அதற்கு முன்னதாக, நாம் தேவனுடைய காரியங்களை செய்ய முற்படக் கூடாது. அதுபோலவே, ஒவ்வொருவருக்கும் நற்செய்தியை அறிவிக்க ஒரு காலமும், நேரமும், அதை அறிவிப்பதெற்கென்று தம்முயைடவர்களை ஏற்படுத்தியிருக்கின்றார். ஆனால் குறித்த காலத்திற்கு முன், குறுக்கு வழியால் புகுந்த சிலர், சில இடங்களுக்கு சென்று, நாங்கள் இதை துரிதாமாக செய்வோம் என்று முற்பட்டு, காலத்திற்கு முன்னதாக மக்கள் மத்தியிலே கலங்கங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்திவிடுகின்றார்கள். பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள் உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள் என்பதின் கருபொருளை அறிந்து தேவ வழிடத்துதலோடு காலங்களை அறிந்து, தேவன் உங்களுக்கு நியமித்தவைகளை மாத்திரம் செய்யுங்கள்.

**பிரசங்கி 3:11**

**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்;**

**ஜெபம்**: பரலோக தேவனே, உம்முடைய வார்த்தைகளின் கருபொருளை அற்பமாக எண்ணாமலும், என்னை நானே ஞானவான் என்று எண்ணாமலும் உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே நடக்க கிருபை செய்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அழைப்பைக் குறித்த உறுதி

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." எவரு டைய ஆத்துமாவும் பாதாளத்திலே அழிந்து போவது தேவனுடைய திட்டமல்ல. அதனால், உலமெல்லாம் பரந்திருக்கும் கோடிக்கணக்கான மக்கள் யாவருக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பது தனி ப்பட்ட ஒரு மனிதனின் பொறுப்பு அல்ல. "அல்லாமலும், எனக்கு அரு ளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது. உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண் ணவேண்டும். ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவ ங்களிருந்தும், எல்லா அவயவங்க ளுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயி ருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ் வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்ற தாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கி றவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திெ சால்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன் பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்க க்கடவன் முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன் இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" என்று பரிசுத்த வேதாகமம் அறிவுரை கூறுகின்றது. ஆனால் இன்று சிலர், சுய சித்ததினாலே தீர்க்கதரிகளாவும், சுவிசேஷகர்களாவும் எண்ணிக் கொண்டு, உலகத்தை சுற்றிவர முயற்சிக்கின்றார். அவர்களால், அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உண்டாகும் பாதகங்கள் பெரிதாயிருக்கும். இவர்களுடைய கனிகளாலே இவர்கள் யார் என்பதை அறிந்து கொள்ளலாம். இவர்களால், தேவனுடைய நாமம் பல இடங்களிலே தூஷிக்கப்பட்டு, சுவிசேஷத்தின் வாசல்கள் அடைபட்டு போய்விடுகின்றது. எனவே உங்களுக்கு கொடுப்பபட்ட பொறுப்புக்களிலே உண்மையுள்ளவர்களாயிருங்கள்.

**ரோமர் 12:3**

**எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்குமிஞ்சிஎண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.**

**ஜெபம்**: வழிநடத்தும் தேவனே, சுய எண்ணங்களுக்கு இடங் கொடுத்து, தேவ சித்தத்தை உணராதவனாக வாழதபடிக்கு, நான் உம்முடைய சித்ததை உணர்ந்து, அதையே நான் நிறைவேற்ற எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிரத்தியேகமான அழைப்பை பெற்றவர்கள்

பொதுவாக கிறிஸ்தவ வாழ்க்கையிலே பாடுகளும் துன்பங்களும் உண்டு. ஏனெனில் “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.” என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். ஆனால், சிலர், சரீரத்திலே பாடுகளையும், துன்பங்களையும், அடிகளையும், மற்றும் அவமானம், நிந்தை, சிறை போன்றவற்றை அனு பவிக்கும்படிக்கும் பிரத்தியேகமாக கிறிஸ்துவின் சுவிசேஷ சேவைக்காக பிரித்தெடுக்கப்படுகின்றார்கள்.

**2 தீமோத்தேயு 3:12**

**அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.**

“அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.” தேவ ஊழியராக தெரிந்து கொள்ளப்பட்ட பவுலைக் குறித்து, கர்த்தர்தாமே, அனனியா என்ற சீஷனுக்கு அறிவித்தார். அப்படியே அவரும் கிறிஸ்துவின் நிமித்தம் அதிகமாக பாடுகளை சகித்தார். “நான் அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன் ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும் பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்.” என்று தன் சுவிசேஷ பணியின் அனுபவத்தை தேவ ஊழியராகிய பவுல் சுரக்கமாக கூறியிருக்கின்றார். நீங்கள் அவ்வண்ணமாக பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று தேவனிடத்திலிருந்து உறுதிதைய பெற்றுக் கொண்டால், அதை தாமதியாமல் செய்யுங்கள். மற்றும்படி, தேவன் அழைத்த அழைப்பிலே நிலைத்திருங்கள். தங்கள் மனங்களை கடினப்படுத்திக் கொண்டு, மதீயினமாக வாழ்பவர்களுக்காக ஜெபம் செய்யுங்கள். ஆனால், நீங்கள் உங்கள் சுயத்திலே அவர்களை இரட்சிக்க முயற்சி செய்யாதிருங்கள்.

**ஜெபம்**: பாடுகளின் மத்தியிலே வெற்றியை தரும் தேவனே, நான் எப்போதும் கிறிஸ்துவை சார்ந்து நடக்க, அழைத்த அழைப்பு உணர்ந்து அதிலே நிலைத்திருக்க எனக்கு தெளிந்து புத்தியை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதற்காக அழைக்கப்பட்டீர்கள்?

ஒரு கிராமத்திலே இயங்கி வந்த சனசமூக நிலையத்தினால், பல நன்மைகள் தரும் திட்டங்கள் அநேக ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதனால், அந்த கிராமத்திலுள்ளவர்கள் பலன் அடைந்தார்கள். சிலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. வேறு சிலர், சிறு கைத் தொழிலை ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். பலருக்கு உணவுப் பொதி கள் கொடுகப்பட்டது. இப்படியாக, நாட்கள் கடந்து போகும் போது, ஒரு பட்டணத்திலே இருந்து சில வைத்திய நிபூணர்கள் அந்தக் கிராமத்திலுள்ள ஜனங்கள் மருத்துவதுறையிலும் பலனடைய வேண் டும் என்று நல்லெண்ணங் கொண்டு, அங்கே, இலவச மருத்துவ சிகிச்சைகளை ஆரம்பித்தார்கள். மக்கள் திரண்டு வந்து, அதனால் அதிக பலனை அடைந்தார்கள். இதைக் கண்ட சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களில், சிலர், நாங்கள் இதை இப்படியே விட்டால், முழுக்கிராமும் அந்தப் பக்கமாக போய்விடுவார்கள், எங்களை கருத்தில் கொள்ள மாட்டார்கள் என்று மனதிலே தீர்மானித்து கொண்டு, வேறு ஊரிலுள்ள சில வைத்தியர்களை அழைத்து, தாங்களும் அத்தகைய சேவைகளை ஆரம்பித்தார்கள். ஆனால், அவர்கள் அந்த வைத்தியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. அதனால், சனசமூக நிலையயம் ஆரம்பித்து பிரதான நோக்கம் தடைபட்டு வந்தது. ஏட்டிக்கு போட்டியாக மருத்துவம் செய்ததால், தங்களிடம் மருத்து சேவைக்கு வராதவர்களுக்கு, மற்றய சேவைகள் கொடுக்கப்பட மாட்டாது என்று அந்த கிராமத்திலே மக்கள் மத்திலே பல குழப்பங்களையும், பிரிவினைகளையும் ஏற்படுத்தினார்கள்.ஆம், பிரியமானவர்களே, இன்று சில சபைகளும் தங்கள் அழைப்பின் நோக்கத்தை மறந்து, மேற் கூறிப்பிட்ட சனசமூக நிலையத்தைப் போல, நடந்து கொள்வதால், தேவனுடைய சித்தம் நிறைவேறுவதற்து தடையாக மாறிவிடுகின்றார்கள். வேறெந்த ஊழியராவது, புதிதாக எதையும் ஆரம்பித்தால், அதை தாங்களும் செய்ய வேண்டும் என்று தங்களைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணி, வியாரபார ஸ்தானபங்களைப் போல ஒருவருக்கொருவர் ஏட்டிக்கு போட்டியாக நடந்து கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, நீங்கள் தேவ சித்த்திற்கு தடையாக மாறிவிடாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாய் அழைத்த அழைப்பிலே நிலைத்திருங்கள்.

**பிலிப்பியர் 3:12**

**கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடரு எனக்கு கிருபை செய்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை

**நீதிமொழிகள் 25:11**

**ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்.**

“காட்டுப்பன்றிகள் அவற்றின் கூர்மையான தந்தங்கள், சக்திவாய்ந்த கடிக்கும் ஆற்றல், ஆச்சரியப்படத்தக்க வலிமை மற்றும் வேகம் காரணமாக மனிதர்களுக்கு மிகவும் ஆபத்தானவை. இயற்கையாகவே அவை தன்பாட்டில் இருந்தால், எவரையும் தாக்குவதில்லை. ஆனால், அவை அச்சுறுத்தப்பட்டதாக உணரும் போது அல்லது தப்பி ஓடுவதற்கு வழியில்லாமல் தடுத்து வைக்க முற்படும் போது, மனிதர்களை தாக்கும். அவைகள் மோதித்த தாக்குவதால், வெட்டுக்கள், துளைகள், எலும்பு முறிவுகள் மற்றும் ஆபத்தான இரத்த இழப்பு போன்ற கடுமையான காயங்களுக்கு வழிவகுக்கும்.” இதற்கு ஒப்பனையாகவே, “உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்” என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். முத்துக்களைப் போன்ற தேவ வார்த்தைகளை, காலத்திற்கு முன்னதாகவோ, காட்டுபன்றிகள் போல மனநிலையுள்ளவர் களுக்கு அறிவுரையாக நீங்கள் கூறும் போது, அந்த வார்த்தைகளின் மேன்மைகளை அவர்கள் அறியாதபடியால், நித்திய ஜீவன் தரும் அவ்வார்த்தைகளை அவர்கள் கனவீனப்படுத்தி, உங்கள் வாழ்க்கை க்கும் பாதகமான பாதிப்புக்களை உண்டாக்கி விடுவார்கள். “பரிசுத்தமா னதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள் உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள் போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.” என்ற வேத வார்த்தையை நன்கு அறிந்து கொள்ளும்படிக்கு இந்த ஒக்டோபர் மாதத்தின் 5ம் திகதியிலிருந்து 11ம் திகதிவரையிலான தியானங்களின் பதிவுகளை கேளுங்கள். “ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்.” “மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்.” என்று பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எனவே, காலத்திற்கு முன்பு அதை மனக்கடினமுள்ளவர்களுக்கும், துன்மார்கத்திலிருப்பவர்களுக்கும் அறிவிப்ப முற்படுகின்றவர்கள் தாங்களும் தேவ வார்த்தைகளை அற்பமாண எண்ணுகின்றவர்களாக காணப்படுவார்கள். ஆதலால், தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு, தேவ வார்த்தைகளை ஏற்ற காலத்திதிலே, சரியான இடத்திலே, கூறப்பட வேண்டியவர்களுக்கு கூறுங்கள். அப்பொழுது அதை பேசுகின்றவர்களுக்கும் கேட்கின்றவர்களுக்கும் பிரயோஜனம் உண்டாகும்.

**ஜெபம்**: அன்புள்ள பரலோக தகப்பனே, உம்முடைய விலை மதிக்க முடியாத வார்த்தைகளை தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு அறிவிக்கும்படி எனக்கு ஞானமுள்ள இருதத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 2:1 – 3

# நல்மனதோடு நற்செய்தி

ஒரு தேசத்திலே வாழ்ந்து வந்த நலன் விரும்பு ஒருவர், பல ஆண்டு களாக, ஊர் ஊராக சென்று, வறியவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் உதவும்படிக்கு பற்பல உதவித்திட்டங்களை முன்னெடுத்து வந்தார். ஏழை எளியவர்களும், திக்கற்றவர்களும் வாழ்வடைய வேண்டும் என் பதே அவருடைய ஒரே நோக்கமாக இருந்தது. அவர் ஒரு குறிப்பிட்ட ஊருக்கு சென்றுகொண்டிருக்கும் போது, அந்த ஊரிலுள்ளவர்களு க்குஉதவுவதற்கு தன்னிடம் போதிய பணமோ பொருளோ இல்லையே என்ற ஏக்கத்துடன் சென்று கொண் டிருந்தார். இந்த வேளையிலே, அந்த ஊரிலுள்ள சில அதிகாரி கள், அந்த நலன்விரும்பியை அப் படியே விட்டுவிட்டால், பெயரும் புகழும் அவனுக்கல்லோ சென்று விடும். ஜனங்கள் எங்களை ஒரு பொருட்டு என்று எண்ணாமற் போய் விடுவார்கள் என்று தங்களுக்குள் தீர்மானம் செய்து கொண்டு, பாரிய அளவிலே, அந்த ஊரிலுள்ள வறியவர்களுக்கும், திக்கற்வர்களுக்கும் உதவி செய்தார்கள். அதைக் கண்ட அந்த நலன் விரும்பி தன்னுடைய நோக்கம் நிறைவேறியதைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அந்த ஊரின் அதிகாரிகள், தங்களுடைய சுய இலாபத்தை அடைந்து கொண்டார்கள். ஏழை எளியவர்கள் மற்றறும் திக்கற்ற பிள்ளைகளின் முகங்கள் மலர்ந்துது. அதனால் அந்த நலன்விரும்பி மனத்திருப்தி யடைந்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, தேவ ஊழியராகிய பவுல் என்பவர், கிறிஜ்துவின் சுவிசேஷத்தினிமித்தம், சிறையில் போடப் பட்டார். அவர் எங்கிருந்தாலும் என்ன நிலையிலிருந்தாலும், கிறிஸ்து அறிவிக்கப்பட வேண்டும் என்பதே அவருடை ஒரே நோக்கமாக இரு ந்தது, அதைக் கண்ட சிலரோ, பவுலின் மேல் பொறாமையடைந்து, எங் களுக்கும் கிறிஸ்துவை அறிவிக்க தெரியும், நாங்களும் அறிவிப்போம் என்று விரோதத்தினால் அதை செய்தார்கள். அதைக் கேள்விப்பட்ட தேவ ஊழியர், தான் செய்ய வேண்டிய காரியம் கைகூடுகின்றதே, கிறிஸ்துவின் நாமம் அறிவிக்கப்படுகின்றதே என்று எண்ணி சந்ததோஷ ப்பட்டார். வஞ்சகத்தினாலும், பொறாமையினாலும் கிரியைகளை நடப்பி க்கின்றவர்கள் அவர் இருதயம் விரும்புகின்றதை அடைந்து கொள் வார்கள். இயேசு கிறிஸ்துவின் நாமம் விருதாவாய் போவ தில்லை. கருப்பொருளாவது, நீங்கள் தேவனிடதிலிருந்து அழியாத நற்பலனை பெறும்படி போட்டி பொறாமைகளை விட்டு, ஏக சிந்தையோடும், இசை ந்த ஆத்துமாக்களாக, நல்மனதோடு கிறிஸ்துவை அறிவியுங்கள்.

**பிலிப்பியர் 1:15**

**சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல் மனதினாலும் கிறிஸ்து வைப் பிரசங்கிக்கிறார்கள்.**

**ஜெபம்:** முடிவில்லாத ராஜ்யத்திற்காக என்னை அழைத்த தேவனே, இம்மைக்காக மாத்திரம் நான் உம்மை சேவிக்காதபடிக்கு, எப்போதும் நல் மனதோடு, உம்முடைய சேவையை செய்ய எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நோக்கத்தை உறுதி செய்யுங்கள்

என்ன நோக்கத்திற்காக நான் இந்த சபைக்கு செல்கின்றேன்? ஏன் நான் தேவானாகிய கர்த்தரை தொழுது கொள்கின்றேன்? எதற்காக நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்? என்ன காரணத்திற்காக ஜனங்கள் சபையிலே பெருக வேண்டும்? இந்த கேள்விகளை ஒவ்வொரு விவாசியும் ஊழியர்களும் தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே தங்களிடம்கேட்டு ஆராய்ந்து கொள்ள முடியும். சிலர் தங்களை தேவ பக்தியுள்ளவர்கள் என்று மற்றவர்கள் கூறும் படிக்கு காரியங்களை நடப்பிக்கின்றார்கள். சில வேளைகளிலே இரட்சிப்பின் நோக்கத்தை தாங்கள் செல்லும் சபைக்கு திரான ஜனங்கள் வர வேண்டும் என்று பிரயாசப்படுகின்றார்கள். “ஆதலால் கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனு‘ர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” என்று தேவ ஊழியராகிய பவுல், தேவனுடைய காரியமானது எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதைக் குறித்து விளக்கிக் கூறியிருக்கின்றார்கள். எனவே, நீங்கள் எங்கிருந்தாலும், கிறிஸ்துவிலிருந்த சிந்தையை தரித்தவர்களாக, பிதாவாகிய தேவனின் திருச்சித்தமானது உங்களில் நிறைவேறும்படிக்கு மனத்தாழ்மையோடும் கீழ்படிவோடும் கிரியைகளை நடப்பியுங்கள். நோக்கம் இழந்தவர்களாக செயற்படாமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்ற மனதுடையவர்களாக இருங்கள். இருதங்களை ஆராய்தறிகின்றவர்கள், உங்களை பெலப்படுத் நடத்திச் செல்வார்.

**பிலிப்பியர் 2:5**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**

**ஜெபம்:** பிதாவாகிய தேவனே, உம்முடைய அநானதி திர்மானத்தை உணர்ந்தவனாக, கிறிஸ்துவிலிருந்து சிந்தையோடு தேவ காரியங்களை நடத்தும்படிக்கு, எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஒக்டோபர் 14 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 19:7–11

# ‘கர்த்தருடைய வேதம் குறைவற்றது’

அக்காலத்திலே, தீமோத்தேயு என்னும் ஒரு வாலிப வயதிலுள்ள ஊழியக்காரர் இருந்தார். அவரிடத்திலே மாயமற்ற விசுவாசம் இருப்பதாவும், அந்த விசுவாசம் முந்தி அவரின் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும, அவருடைய தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன். என்று தேவ ஊழியராகிய பவுல், எப்படி ஊழியம் செய்ய வேண்டும்? எப்படி சபையை நடத்த வேண்டும்? எப்படி உபதேசிக்கவேண்டும்? எவைகளைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்? என்று சபையையும், ஊழியத்தையும் குறித்து பற்பல காரிங்களை தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாகவும் கட்டளையாகவும் கூறியிருக்கின்றார். மேலும் தேவ ஊழியராகிய பவுல் குறிப்பிடுகையில், “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதை யாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.” என்று இரடசிப்படைந்த விசுவாசிகளை குறித்து கூறியிருக்கின்றார். “பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள் உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்” என்தைக் குறித்து தியானம் செய்து வருகின்றோம். நாய்கள் கக்கினதை மறுபடியும் உண்பது போல, தாங்கள் விட்டு வந்த அருவருப்புகளை திரும்பும் செய்கின்றவர்களும், தாங்கள் விழுந்து கிடந்து அழுக்கான சேற்றை நாடிச் செல்கின்றவர் களும்,தேவ வார்த்தையின் மேன்மையை உணர மாட்டார்கள். ஆனால், தேவ பிள்ளைகளுக்கோ, அவை ஒவ்வொரு கணப்பொழுதும் அவசிய மானதும்,தேவையானதும். இரவும் பகலும் தியானம் செய்வதற்கு அவை கள் ஏற்றவைகள். கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூ ட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. எனவே, தேவ வார்த்தையானது தேவ பிள்ளைகளுக்கு எக்காலத்திலும் பிரசங்கிபட வேண்டும். சில வேளைகளிலே அவர்கள் அதை விரும்பாமல் இருந்தாலும், கடிந்துகொண்டு உபதேசிக்கப்பட வேண்டும்.

**2 தீமோத்தேயு 4:2**

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு;**

**ஜெபம்:** பரலோக தேவனே, நான் உமக்கேற்ற காலத்திலே கனிகொடுத்து, உமக்கு பிரியமானவனாக வாழும்படிக்கு, உம்முடைய திருவசனத்தை எப்போதும் தியானம் செய்ய எனக்கு நல் உணர்வை தந்தது வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விழிப்புணர்வுள்ள வாழ்க்கை

**மத்தேயு 25:13**

**மனுஷகுமாரன் வரும் நாளை யாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடி யால் விழித்திருங்கள்.**

“அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.” யாவரும் கிறிஸ்வின் வருகையை எதிர்பார்த்து தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்தார்கள். ஆண்டுகள் கடந்து சென் றதும், களைப்பும், இளைப்பும், சோர்வும் யாவருக்கும் உண்டாயி ருந்தது. “நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.” மணவாளன் கிறிஸ்து வருகின்றார் என்று சத்தத்தை யாவரும் கேட்டு, யாவரும் துரிதமாக எழுந்திருந்து ஆயத்தப்பட முயற்சி செய்தர்கள். அவர்களுக்கு ஏற்பட்ட சோர்வானது, தங்கள் எஜமானனுக்காக பகல் முழுவதும் வயலிலே கடுயைாக உழைத்து, மாலையிலே உடல் சோர்வினால் அயர்ந்து போகும் சோர்வாவாக இராமல், அவர்களுடைய அஜாக்கிரதையான வாழ்க்கை முறையி னால் உண்டாயிருந்தது. அதனால் அந்த ஐந்து மணவாட்டிகளுக்கு ஆயத்தப்பட முடியவில்லை. மணவாளனாகிய கிறிஸ்து இன்னும் ஐந்து நாள் தாமத்திது வந்திருந்தாலும், அவர்கள் அந்த நிலையிலே இருக்கும் மனதுடையவர்கள். ஆனால், எந்த நிலையிலும், மற்றய ஐந்து பேர், தங்கள் நோக்கத்தை இழந்து போகவில்லை. அவர்கள் உள்ளான மனிதன் விழிப்பாகவே இருந்தது. அவர்களுடைய வாழ்க்கையானது இந்த பூவுலகத்தை விட்டு செல்ல எப்போதும் ஆயத்தமாகவே இருந்தது. ஆவிக்குரிய ஆயத்தம் அவர்கள் வாழ்விலே இருந்தது. நாமும் சில வேளைகளிலே அயர்ந்து போனாலும், கர்த்தருடைய சத்தத்தை கேட்கும் போது, உடடினயாக எழுந்து, அவருடைய சேவையை செய்ய, சுவிசேஷத்தை அறிவிக்க, பெற்ற தாலாந்துகளை உபயோக்கிக்கப்போதும் ஆயத்தமுள்ள மனதுடையவர்களாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** பரலோக தேவனே, புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைப் போல, என்னுடைய வாழ்க்கை எப்போதும், உம்முடைய நாளுக்கென்று ஆயத்தமுள்ளதாக இருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எப்போது ஆயத்தப்படுவது?

ஒரு ஊரிலே பல ஆண்டுகளாக நடந்து வந்த யுத்தம் காரணமாக, உள்ளூரட நிர்வாகம் சரியாக இயங்கி வராததால், அங்கு வாழ்ந்து வந்த மக்கள் மத்தியிலே, களவும் கொள்ளையும், களியாட்டமும், துஷ்ட தனமுமான வாழ்க்கை முறையானது பெருகிக் கொண்டே சென்றது. அந்த ஊரிலே வாழ்ந்து வந்த இரண்டு நண்பர்களுக்கு அங்கிருந்து தப்பித்துக் கொள்ளும் போக்கு உண்டாயிற்று. அது எப்படியெனில், அடுத்து ஊருக்கு செல்வதற்கான கடவுச் சீட்டும், அனுமதிபத்திரமும் அவர்களுக்கு கிடைத்தது. அதன்படிக்கு, அந்த ஊருக்கு வரவிருக்கும் சிறிய விமானமொன்றிலே அவர்களும், அவர்கள் குடும்பத்தினரும் ஏறிக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அவர்களிலே ஒருவன், இந்த செய்தி கிடைத்த நாழிகையிலேயே தான் வாழும் ஊரைவிட்டு செல்வதற்கு தீர்க்மான முடிவை எடுத்து, தன் குடும்பத்தனரையும் ஆயத்தப்படுத்திவிட்டான். நாளாந்தம் அவன் செய்ய அவசியமான காரியங்களை மாத்திரம் செய்து கொண்டு, தன் செவியை வரவிருக்கும் ஆகாய விமாத்தின் சத்த்திற்காக திறந்து வைத்திருந்தான். ஆனால், மற்ற நண்பனோ, ஆயத்தம் செய்யபோதும், தன் உறவிரோடும், நண்பர்களோடும் போக்கும் வரத்துமாக இரந்து வந்தான். இருக்கும் வரைக்கும் உல்லாசமாக இருப்போம் என்று எண்ணினான். ஆனால், ஒருநாள் இவன் இப்படியாக பற்பல அநாவசியமான அலுவல்களிலே தன்னை சிக்க வைத்துக் கொண்டிருந்த போது, அந்த விமானம் வந்து அவனுடைய வீட்டிற்கு அருகிலே இறங்குவதை கண்டான். ஆனால், தன் அலுவல்களை முடித்து, அவன் அந்த விமானம் தரையிறங்கின இடத்திற்கு செல்ல முன்னதாக அந்த விமானம், ஆயத்தமாக இருந்தவனை ஏற்றுக் கொண்டு பறந்து சென்று விட்டது. நித்திய வாழ்விற்காக அழைப்பைப் பெற்ற பிரியமான சகோதர சகோதரிகளே, மேற்கூறிய சம்பத்திலுள்ள இரண்டு நண்பர்களில், ஆயத்தமாக இருந்தவன், எப்போது ஆயத்தப்பட்டான்? ஏன் இரண்டாவது நண்பன் இரட்சிப்பின் செய்தியை ஏற்றுக் கொண்டிருந்தும் ஏன், அதை அடையாமற்போனான்? அழைப்பை பெற்ற நம்முடைய வாழ்க்கையிலே, இந்த உலகத்திலே தேவைகள் உண்டு அதே நேரத்திலே உலக ஆசைகளும் உண்டு. எதை நீங்கள் நிறைவேற்றப் போகின்றீர்கள்? இதை தியானித்து செயற்படுங்கள்.

**மத்தேயு 24:44**

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்;ஆதலால்,நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

**ஜெபம்**: மேலானவைகளை நாடுங்கள் என்று சொன்ன தேவனே, நாட்கள் பொல்லாதவைகளானதினாலே நான் காலத்தை ஆதயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாருக்கு எப்போது கனி கொடுக்க வேண்டும்

நாம் எப்போதும் கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும், அந்த காத்திருப்பின் காலத்திலே, நாம் பெற்ற நற்செய்தியை எப்படி, எப்போது மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதைக் குறித்து, கடந்து இரண்டு வாரங்களாக தியானித்து வருகின்றோம். அந்த தியானங்களை கருத்தோடு தியானித்திருந்தால், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள் உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள் போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்." என்பதின் பொருளை நன்றாக அறிந்திருப்பீர்கள். ஒவ்வொன்றிற்கும் ஏற்ற காலம் ஒன்று உண்டு. அதை அறிந்து நாம் செயற்பட வேண்டும். ஆனால், கிறிஸ்தவனாக வாழ்வது எக்காலத்திற்கும் உரியது. இந்த உலகத்திலே பாவிகள், துன்மார்க்கர், பரியாசக்காரர் மத்தியிலே வாழ்ந்து வருகின்றோம். அவர்கள் முன்னிலையிலும் நாம் தேவன் விரும்பும் கனிகளை காண்பிக்க வேண்டும். நற்செய்தியை அறிவிப்பதற்கும், ஒருவேளை சபைக்கு அழைப்பதற்கும் காலம் ஏற்றதாக இருக்கவிட்டாலும், அவர்கள் கடும்போக்க நடவடிக்கைகள் மத்தியிலும், கிறிஸ்துவின் சாயல் நம்மிலே வெளிப்பட வேண்டும். சுவையான கனிகொடுக்கும் மாமரமானது, தன்னண்டை வரும் மனிதர்ககிள் சுபாவங்களை அறிந்து வெவ்வேறுவிதமான கனிகளை கொடுப்பதில்லை. அந்த மரமானது எப்போதும், யாவருக்கும் சுவையான கனிகளையே கொடுக்கும். அதுபோலவே, நம்முடைய வாழ்க்கை முறையானது மற்றவர்களுக்கு முன்பாக எப்போதும் நற்செய்தியாகவே இருக்க வேண்டும். அந்த வாழ்க்கை முறை ஒரு நாளிலே உருவாகப் போவதில்லை. ஒவ்வொரு நாளும் நாம் வளர்ந்து பெருக வேண்டும். சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் எப்போதும் நம்மில் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தமாக இருப்பது என்பது, வானத்தை அண்ணாந்து பார்த்து கொண்டிருப்பது என்பது பொருளல்ல என்பதை நாம் யாவரும் நன்றாக அறிந்திருக்கின்றோம். இரவும் பகலும் அவருடைய வேதத்திலே தியானமாயிருந்து, அதின் காலத்திலே கனிகொடுக்கின்ற நல்ல மரத்தைப் போல நம்முடைய வாழ்க்கை காணப்பட வேண்டும்.

**பிலிப்பியர் 2:15**

**கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு,**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழ என்னை அழைத்த தேவனே, மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் நல்ல கனிகொடுக்கிற மரத்தைப் போல, என் வாழ்க்கையும் மாறுபடிக்கு நீர் என்னை கரம்பித்து வழிநடத்திச்செல்வீராக. இரட்சகர் இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தளர்ந்து போகாமல் வேண்டுதல் செய்யுங்கள்

"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதா வானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்". "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்." "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." "என் நாமத்தினா நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." . "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" இப்படியான பரிசுத்த வேதாகமத்திலே வேண்டுதல்களை குறித்தும், பிதவாகிய தேவன் தாமே, தம்முடைய பிள்ளைகளுக்கு அருளும் நன்மையான ஈவுகளை குறித்த அநேக உறுதியான வாரத்தைகள் உண்டு. எனவே, நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், உங்களை விசாரிக்கின்ற பரம பிதா உங்களுக்கு இருப்பதால், உங்கள் இருதயத்திலுள்ளவைகளை அவரிடத்திலே தெரியப்படுத்துங்கள். உங்கள் மனக்கிலேசங்களை அவர் அறிந்திருக்கின்றார். நாட்கள் கடந்து செல்கின்றது என்று சோர்ந்து போய்விடாதிருங்கள். எனவே, விசுவாசத்திலே தளர்ந்து போய்விடாதிருங்கள். காரியங்களை உங்கள் கரத்திலே எடுத்துக் கொண்டு, மாம்சத்திலே கிரியைகளை நடப்பித்து, இன்னும் அநேக நோவுகளை வரவித்துக் கொள்ளாதபடிக்கு, இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் தேடுகிறவன் கண்டடைகிறான் தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் என்று ஆண்வராகிய இயேசு கூறியிருக்கின்றார்.

**மத்தேயு 7:8**

ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

**ஜெபம்:** என்மீது அன்புகூர்ந்து உம்முடைய திருக்குமாரனை எனக்காக கொடுத்த தேவனேஇ எந்த ஒரு நன்மையையும் நீர் மறைத்து வைப்பதில்ஜ என்பதை உணர்ந்து உறுதியாய் இருக்க கிருபை செய்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்முடைய வேண்டுதல்கள் என்ன?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த தகப்பனானவர், தன் குமாரனை அதிகமாக நேசித்து வந்தான். அவன் குழந்தையாக இருந்த நாட்களிலே அவனுக்கு தேவையானவற்றையும், நேரம் தாமதிக்காமல் அவனுக்கு வாங்கிக் கொடுத்தார். அவன் வளர்ந்து பாடசாலைக்கு செல்லும் நாட்களிலே, இந்த உலகத்தோடுள்ள தொடர்புகள் அவனுக்கு ஏற்பட்டது. பற்பல விதமாக பிள்ளைகளை பாடசாலைகளிலே தினமும் சந்தித்து பேசி, அவர்களோடு ஓடி விளையாடி வந்தான். அந்தத் தொடர்புகளினாலே அவன் மனதிலே ஆசைகள் தோன்றியது. மற்றய மாணவர்களிடமிருக்கும் பொருட்கள் சிலவற்றை பார்த்து ஆசைப்பட்டான். அந்த ஆசைகளை வந்து தன் தகப்பனானவரிடம் தெரிவித்தான். அவன் கண் கண்ட பொருட்கள் எல்லாவற்றையும் தனக்கு வாங்கி கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். ஆனால், அவனுடைய தகப்பனானவர், அவனை அதிகமாக நேசித்ததால், அவன் வேண்டிக் கொண்ட எல்லாவற்றையும் அவனுக்கு வேண்டிக் கொடுக்கவில்லை. ஏனெனில், அவற்றுள் சில பொருட்கள், அவன் வாழ்விலே அவன் அடைய வேண்டிய இலக்கை அடைந்து கொள்வதற்கு தடையாக இருக்கும் என்றும், இன்னும் சில அவன் மனதின் யோசனைகளை தவறான வழிக்கு கொண்டு செல்லும் என்பதை நன்றாக அறிந்திருந்தார். அந்த சின்ன வயதிலே பையன், தன் தகப்பனானவருடைய முடிவைக் குறித்து திருப்தியாக இருக்கவில்லை. ஆனால், அவன் வளர்ந்து பெரியவனானபோது, தகப்பனானவர் ஏன் தனக்கு சில காரியங்களை தடை செய்தார் என்பதை நன்றாக அறிந்து உணர்ந்து கொண்டான். தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படும் பாக்கியம் பெற்ற அருமையான சகோதர சகோதரிகளே, இந்த உலகத்தின் பிதாக்கள், தங்கள் பிள்ளைகள் வேண்டிக் கொள்ளும் போது, தீமையானவைகளை தடை செய்து, நன்மையானவைகளையே தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்க அறிந்திருக்கும் போது, தம் ஒரே பேறான குமாரனையபெ நமக்காக கொடுத்து, நம்மீது அன்புகூர்ந்து நம்முடைய பரம பிதா, நன்மையாகவைகளையே நமக்கு தருவது அதிக நிச்சயமாயிருக்கின்றது. அப்படியானால், நம் வாழ்விற்கு தீமையான வைகளை நமக்கு தடை செய்வதும் அதிக நிச்சியமாக இருக்கும் அல்லவோ!

**யாக்கோபு 1:17**

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது**

**ஜெபம்:** நன்மைகளின் ஊற்றாகிய என் பிதாவாகிய தேவனே, என் வாழ்விற்கு நீர் எப்போதும் நன்மையானதையே செய்வீர் என்ற நம்பிக்கையிலே நான் அசையாது நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பிரதான தேவ சித்தம்

நம்முடைய ஆத்துமாக்களை பாதளத்தின் வல்லமைக்கு காத்துக் கொள்ளுக்கும்படியாகவே, பிதாவாகிய தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகிற்கு அனுப்பினார். குமாரனாகிய இயேசுவே, எந்த ஒரு மனிதனும் பெற்றுக் கொள்ளக்கூடிய அதி உச்சிதமான நன்மையாக இருக்கின்றார். அதி உச்சிதமான நன்மையை நமக்காக கொடுத்தவர், வேறு எந்த நன்மைகளையும் நமக்கு மறைத்து வைக்க மட்டார். ஆனால், இன்று தேவனுடைய பிள்ளைகள், சில வேளைகளிலே தாங்கள் வேண்டிக் கொள்வது இன்னதென்று அறியாதிருக்கின்றார்கள். தேவனுடைய பிரதானமான அழைப்பின் நோக்கம் நித்திய ஜீவன். அந்த பிரதானமான நோக்கத்தை மறந்து, பற்பல ஆசைகளால் இழுப்புண்டு, அவைகளை பெற்றுக் கொள்ளும்படி நாடித் தேடுகின்றார்கள். ஆதியிலே, ஆதாம், ஏவாளுக்கு மகிமையான வாழ்வை கொடுத்து, தீமையானது என்ன என்று அவர்களுக்கு கற்றுக் கொடுத்து, தீமையானதை புசிக்க வேண்டாம் என்று எச்சரிப்பைக் கொடுத்தார். அதனால், நாம் யாவரும் வழிதப்பிப்போனாம். தேவ கிருபையினாலே, ஆண்டவராகிய இயேசு வழியாக நாம் கண்டு பிடிக்கப்பட்டு, நித்திய ஜீவனிக் வழியாக அவரிலே சார்ந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றுருக்கின்றோம். எப்படி, ஆதாம் ஏவாளுக்கு எச்சரிப்பு வழங்கப்பட்டதோ, அதே பிரகாரமாக, நாம் தீமையானதை நாடித் தேடாதபடிக்கு எச்சரிப்பைப் பெற்றிருக்கின்றோம். ஆதியிலே அவர்கள் தங்கள் சொந்த சுயாதீனத்தின்படி எப்படி கீழ்படியானமற் போனார்களோ அப்படியாக நாமும் கீழ்படியாமல் போகும்படிக்கு சுயாதீனமுள்ளவர்களாக இருக்கின்றோம். எனவே, நித்திய ஜீவனை தரும்படி வந்த ஆண்டவராகிய இயேசு, ஆத்துமாகவக்கு கேடு விளைவிக்கக்கூடிய தீமையானவைகளை நமக்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். ஆனால், நமக்கு கொடுக்கபட்ட சுயாதீனத்தை தீமையானதை நடப்பிக்க நாம் பயன்படுத்துவோமாக இருந்தால், நாம் மறுபடிம் வழிதப்பிப் போய் விடுவோம். எனவே, நாம் எதை நாடித் தேடுகின்றோம், எதை தேவனிடத்திலே கேட்டுக் கொள்கின்றோம் என்பதை குறித்து உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் நித்திய ஜீவனை அடைவதே தேவ சித்தம். அதற்கு விரோதமான காரியங்களை குறித்து வேண்டுதல் செய்யாதிருங்கள்.

**1 யோவான் 5:14**

**நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, நீர் எனக்கு கொடுத்த சுயாதீனத்தை நான் என் துர்குணத்தை நிறைவேற்றுவதற்கு சாதகமாக பயன்படுத்தி, என் வழிகளை நான் நியாயப்படுத்ததாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பெற்ற நன்மைகள் எதற்கு?

**கலாத்தியர் 5:24**

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

சமஸ்த இஸ்ரவேலின் ராஜ்யபாரம் தாவீதின் குமாரனாகிய சாலொமோனிடத்திற்கு கொடுக்கப்பட்டபோது, அவன் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் என்று வேண்டுதல் செய்தான். அந்த விண்ணப்பம் கர்த்தருடைய பார்வையிலே பிரியமாக இருந்தது. ஆதலால்கர்த்தர், அவனை நோக்கி: நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன் ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன் இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன் உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை என்று அவனை ஆசீர்வதிதார். அதனால், அவன் அந்நிய தேவர்களை வழிபடும் ஸதிரிகளை தனக்கு மனைவிகளாக ஏற்படுத்திக் கொண்டது, தேவன் அனுமத்தித்த காரியமா? முந்நூறு மனைவிகளையும், எழு நூறு மறுமணவாட்டிகளையும் தனக்கென ஏற்படுத்திக் கொண்டது தேவனுடைய ஆசீர்வாதம் என்று கூற முடியுமோ? இல்லை. தேவ ஆசீர்வாதமானது, தேவனுடைய கற்பனைகளுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும். அவர் தமக்கு வார்த்தைக்கு விரோதமாக எதையும் செய்பவர் அல்லர். அதுபோலவே, நாம் வேண்டிக் கொண்ட பிரகாரம் தேவன் எங்களுக்கு பொருளாதார விருத்தியை கொடுத்திருக்கின்றார் என்று ஒரு விசுவாசி சாட்சியாக கூறிக் கொண்டான். அதனால், அவன் தனக்கு கிடைத்த பொருளாதரத்தை தன் இஷ்டப்படி, தன் ஆசைகளை நிறைவேற்றும்படி செலவு செய்து கொண்டு, அதை தேவன் செய்தார் என்று கூற முடியாது. தேவனுடைய ஆசீர்வாதம் நம் ஆசை இச்சைகளை நிறைவேற்றும்படி கொடுக்கப்படு வதில்லை. தேவனானவர் நமக்கு நன்மைகளை ஈந்திருந்தால், அவைகளை நன்மைக்கேதுவாக பயன்படுத்த வேண்டும்.

**ஜெபம்**: நன்மையினால் என் வாயை திருப்த்தியாக்கின்ற தேவனே, என் ஆத்துமா எப்போதும் உம்மை வாஞ்சித்து, உமக்கு நன்றியறிதலுள்ளவர்களாக இருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனிடத்தில் பெற்றுக் கொண்டவைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தன் படிப்பை முடித்து, பின்பு, வேலை தேடி திரிந்தான். அடுத்து ஊருக்கு சென்று வேலை பார்க்கும்படி முயற்சிகள் எடுத்த போது, அதைக் குறித்து பல தடைகள் உண்டாயிருந்தது. அவனுடைய பெற்றோர் வழியாக, அந்த ஊருக்கு செல்வது தேவ சித்தம் இல்லை என்று அவனுக்கு வெளிப்படு த்த ப்பட்டது. பின்பு அவன் தான் வசித்த ஊரின் மற்றப் பகுதியிலே, ஒரு வேலையை செய்து வந்தான். அவனுடைய வேலை மிகவும் தொலைவில் இருந்ததால், இரயிலில் சென்று வருவது, அநேக மணித்தியாலங்களை எடுத்ததால், அவன் தினமும் இளைப்படைந்தவனாகவும், தன்னுடை வீட்டு அலுவல்களை செய் வதற்கு நேரமற்றவனாகவும் இருந்தான். அதனால், அவன் தன் பெற்றோரோடு சேர்ந்து தங்கள் குடும்ப ஜெபத்திலே ஒரு மோட்டார் சைக்கிள் தேவை என்று, தேவனிடத்திலே விண்ணப்பம் பண்ணினான். சில மாதத்திற்குள், அதிசய விதமாக, அவனுடைய கம்பனியினால், அவனுக்கு ஒரு வாகனத்தை வாங்கிக் கொடுத்தார்கள். அவன் மிகவும் சந்தோஷமடைந்து, சபையிலே சாட்சி பகர்ந்தான். அதை கேட்ட யாவரும் தேவனை துதித்தார்கள். மாதங்கள் கடந்து சென்றதும், அவன் தன் நண்பர்களில் ஒருனோடு சேர்ந்து, எந்த ஊருக்கு தேவன் போகாதே என்று சொன்னாரே, அந்த ஊருக்கு சென்று, நண்பனோடு சேர்ந்து, நாட்களை உல்லாசமாக களித்து வீடு திரும்பினான். அந்த வாகனத்தை தேவன் அவனுக்கு கொடுத்ததால், அவன் செல்லும் இடங்கள் எல்லாம் தேவனுக்கு சித்தமானது என்று கூறிக் கொள்ள முடியுமோ? தேவன் என் மனவிருப்பதை நிறைவேற்றினார் என்று அவன் சாட்சி பகர கூடுமோ? பிரியமான தேவ பிள்ளைகளே, இவ்வண்ணமாகவே, தேவனாகிய கர்த்தர் தாமே, ஒரு விசுவாசி வாழும்படி கொடுத்த வீடு, நமக்கு கொடுகப்ட்ட பொருட்களும் இருக்கின்றது. அங்கே தேவனுடைய சித்த்திற்கு விரோதமாக செயல்கள் நடைபெறுவதும், நடைபெறாமலிருப்பதுதையும் குறித்த தீர்மானம் அந்த விசுவாசியின் தீர்மானமாக இருக்கின்றது. எனவே, நீங்கள் தேவனிட த்திலிருந்து வேண்டி பெற்றுக் கொண்டவைகளை, தேவ சித்தமானது உங்களில் நிறைவேறும்படிக்கு தேவ ஆவியானவரின் வழிநட த்துதலோடு பயன்படுத்துங்கள்.

**1 யோவான் 2:17**

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த, மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளை நான் பற்றிக் கொள்ளாதபடிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசமுள்ள ஜெபம்

எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருந்தது. முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். ஆண்டவராகிய இயேசு அவனை தம் வார்த்தையால் சொஸ்தமாக்கினார். அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார். வேறொரு சமயத்திலே, அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீ'ர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான் என்றார். கருப்பொருளாவது, சில மனிதர்களுடைய வியாதிகள் அவர்களுடைய பாவமான வாழ்க்கையினாலே அவர்களை பிடித்துக் கொள்கின்றது. ஆனால், எல்லோருடைய பெலவீனங்களும் அவர்களுடைய பாவ சாபங்களினாலே உண்டாகுவதில்லை. வியாதிஸ்தர்களுக்காக ஜெபிக்கும் போது, தேவனுடைய வார்த்தையின்படி ஜெபம் செய்யுங்கள். “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன் ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக் அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் கர்த்தர் அவனை எழுப்புவார் அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.” என்று யாக்கோபு *5:13-15* வசனங்களிலே வாசிக்கின்றோம். தேவ வார்த் தையை பின்பற்ற விரும்பினால், தேவன் அமைத்த சபையின் ஒழுங்கு முறையை நீங்கள் பின்பற்றுங்கள். கடினமான சூழ்நிலையிலும், நீங்கள் தேவ வார்த்தைக்கு கீழ்படியும் போது, அதனால் நீங்கள் உங்கள் மனத்தாழ்மையையும், தேவ வார்த்தையிலுள்ள விசுவாசத்தை கிரியையினாலே வெளிப்படுத்துகின்றீர்கள். அப்பொழுது தேவ வார்த்தையினால் உங்களுக்கு விடுதலை உண்டாகும்.

**யாக்கோபு 5:15**

அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்;

**ஜெபம்:** வார்த்தையை அனுப்பி குணமாக்குகின்ற தேவனே, என்னை எதிர்நோக்கும் கடினமான சூழ்நிலைகளிலும் உம்முடைய வார்த்தைக்கு நான் கீழ்படிந்து நடக்க நீர் எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீதிமானின் ஊக்கமாக ஜெபம்

ஒரு மனிதனாவன் ஒரு பாத்திரத்திலே தெளிந்த நல்ல தண்ணீரை வைத்திருந்தான். அந்த பாத்திரத்திற்குள் ஒரு சிறு துளி விஷம் விழுந்து விட்டடால், அந்த தண்ணீரை நல்ல தண்ணீர் என்று கூறுவீர்களா? அல்லது அந்தத் தண்ணீரிலே விஷம் கலக்கப்பட்டிருக்கின்றது என்று கூறுவீர்களா? அந்த தண்ணீர் எந்த பாவனைக்கும் உபயோகமற்றதாக இருக்கும். அதற்கொத்ததாகவே, ஒரு விசுவாசியினுடைய மனதிலே ஏற்படும் கசப்பை நாம் சம்பந்த ப்பட்டவர்களோடு அறிக்கை செய்து ஒப்புரவாக்காவிட்டால், அந்த விசு வாசியின் மனதிலே கசப்பு குடி கொண்டு விடும். அத்த மனதை சுத் தமானது என்று கூற முடியுமா? இப்படிப்படிப்பட்ட வாழ்க்கை முறை நீதிமானுக்கு ஏற்புடையதாகுமா? ஒருவேளை ஒ ருவிசுவாசியானவன், இப்படியாக தன் மனதிலே கசப்பை வைத்துக் கொண்டு, தன்னை நீதிமான் என்று கூறிக் கொண்டால், தேவ சமுகத்திலே அது பிரியமான ஜெமாக இருக்குமோ? எனவே, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்ய முன்னதாக, தேவ பிள்ளைகள் தங்கள் இருதயங்களை ஆராய்ந்து பார்த்து, தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை அறிக்கை செய்து, தேவ வார்த்தையின்படி விட்டுவிட வேண்டும். சில வேளைகளிலே சில விசுவாசிகள் தங்கள் மனதிலே குறிப்பிட்ட விசுவாசியோடு நல்லிண க்கத்தோடு வாழாமல், அந்த விசுவாசி சுகமடைய வேண்டும் என்று ஜெபிப்பதுண்டு. இந்த ஜெபத்தை ஊக்கமான ஜெபம் என்று கூறிக் கொள்ள கூடுமோ? தனக்கெதிராக குற்றம் செய்த விசுவாசிக்கு இரக் கத்தை காண்பிக்க மனதில்லை ஆனால் ஆண்டவரே அவனுக்கு இரங்கும் என்று வேண்டுதல் செய்து கொள்கின்றார்கள். “நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும். அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக் கிறது. அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை.” கர்த்தர் நீதிமான் களின் ஜெபத்தை கேட்கின்றார். “கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடு தலுக்குத் திறந்திருக்கிறது.” எனவே நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. கர்த்தருக்கு பிரியமான வர்களாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் பெலவீனங்களிலே உதவி செய்ய ஆவியானவர் ஆயத்தமுள்ளவராக இருக்கின்றார். ஒப்புரவாகு ங்கள். அப்பொழுது உங்கள் ஜெபம் கர்த்தருக்கு பிரிமுள்ளதாக இரு க்கும்.

**சங்கீதம் 34:15**

**கர்த்தருடைய கண்கள் நீதி மான்கள்மேல் நோக்கமாயி ருக்கிறது; அவருடைய செவி கள் அவர்கள் கூப்பிடுதலு க்குத் திறந்திருக்கிறது.**

**ஜெபம்**: இரகத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, உமக்கு வேதனையு ண்டாக்கும் வழிகளை விட்டு, உண்மையுள்ள இருதயத்தோடு ஊக்கமாக ஜெபம் செய்யும்படிக்கு, எனக்கு பெலன் தந்த வழிநடத்திச் செல்வீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நானோ என் கர்த்தரை நம்பியிருக்கின்றேன்

இந்த உலகத்திலே நீடித்த ஆயுசுள்ளவர்களாக பெயரும் புகழுடனும் வாழ்ந்து, முதிர்வயதும், நரைமயிருடனும் மரித்து, ஆடம்பரமான அடக்க ஆராதனையுடன் கடந்து செல்கின்றவர்கள் யாவரும் பரிசுத்தவான்கள் என்று கூற முடியாது. அதே போல, இளவயதிலே மரித்துப் போகின்றவர்கள் யாவரும் பாவிகள் என்றும் பொருளல்ல. அநேக ஆண்டு காலமாக வாழ்ந்து, தேவனுடைய நீடிய பொறுமையையும் இரக்கத்தையும் அசட்டை பண்ணி, செல்வம், சுகம், பெயர் புகழுடன் வாழ்ந்து, "தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம் அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள். ஆகிலும் கனம்பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை. அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான். இதுதான் அவர்கள் வழி, இதுதான் அவர்கள் பைத்தியம் ஆகிலும் அவர்கள் சந்ததியார் அவர்கள் சொல்லை மெச்சிக்கொள்ளுகிறார்கள். சில வேளைகளிலே, தங்கள் சரீரத்தை சில ஆண்டுகள் கூட பேணிப் பாதுகாக்க வழியில்லாத நீதிமான்கள், காலத்திற்கு முன் மரித்துப்போனலும், அவன் அவன் ஆத்துமா அழிவைக் காண்பதில்லை. பிரியமான சகோதர சகோதரிகளே, ஒருவருக்காக ஒருவரம் மன உருகத்தோடு ஜெபிக்க வேண்டும் என்பது வேதம் நமக்கு கூறும் ஆலோசனை. சில வேளைகளிலே, அதின் பலனை, நாம்இந்த உலகத்திலே இப்போது காணமுடியாமல் இருக்கலாம். அதனால் சோர்ந்து போய்விடாதிருங்கள். சிலருக்காக நாம் கருத்தோடு, இரவு பகலாக ஜெபித்தாலும், சுகத்தை காணமல், அவர்கள் இந்த உலகத்தைவிட்டு கடந்து போகலாம். அதனால், ஜெபத்திலே சோர்ந்து போய்விடாதிருங்கள். பரம பிதா யாவற்றையும் அறிந்திருக்கின்றார். அவர் நன்மையே செய்கின்றார் என்ற சத்தியதிலே மாற்றுக் கருத்தில்லா தவர்களாக, விசுவாசத்திலே நிலைத்திருக்க வேண்டும். இந்த உலக வாழ்க்கை நித்தியமானது அல்ல. ஒருநாள் யாவரும் கடந்து செல்ல வேண்டும். சிலர் முந்திக் கொள்வதினால், தேவன் அவர்களை கைவிட்டுவிட்டார் என்று எண்ணங் கொள்ளாதிருங்கள். எக்காலமும் தேவனுடைய கரத்திற்கு உட்பட்டிருக்கின்றது. எனவே சோர்ந்து போகாமல், இடைவிடாமல் ஜெபம் செய்யுங்கள். கர்த்தர் நிச்சயம் பலனளிப்பார்!

**சங்கீதம் 31:14**

**நானோ கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நீரே என் தேவன் என்று சொன்னேன்.**

**ஜெபம்**: என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்டு, என்னை ஏற்றுக்கொள்ளும் தேவனே, நான் சோர்ந்து போகமல்? விசுவாசத்திலே நிலைத்திருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தர் ஒருபோதும் கைவிடமாட்டார்

**உபாகமம் 31:8**

**அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.**

ஒரு சமயம், "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான் அந்த வேளையிலே அங்கே இருந்தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவருக்கு அறிவித்தார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அந்தக் கலிலேயருக்கு அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே, மற்ற எல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல் லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்." இந்த பூமியிலே நடக்கும் பற்பல சம்பவங்களை கண்டு, சில வேளைகளிலே விசுவாசிகளும் குழப்படைந்து சோர்ந்து போய் விடுகின்றார்கள். உலகிலே நடக்கும் எல்லாக் காரியங்களுக்கும் காரணங்களை தேடுகின்றவர்கள், தேவன் பேரிலுள்ள விசுவாசத்தைவிட்டு வழுது, பயமும் சந்தேகமுள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். நாம் தரிசித்து நடப்பவர்கள் அல்ல மாறாக விசுவாசித்து நடக்கின்றோம். கர்த்தர் நம்மை கைவிடுவதுமில்லை, மறந்து போவதுமில்லை. இது பொய்யுரையாத தேவனாகிய கர்த்தருடைய வாக்குத்தத்தம். எனவே, நாம் வாழ்தாலும், மரித்துப் போனாலும், நாம் அவருடையவர்கள் என்பதே நமக்கு உறுதியான விசுவாசம். எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு. வெளிப்படாத மறைபொருள் ஒன்றுமில்லை. மனந்திருப்பி, ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொள்கின்றவர்களுக்கு இந்த உலகத்திலே மரணம் இல்லை என்று தேவன் ஒருபோதும் சொன்னதில்லை. மாறாக, மனந்திரும்பி, ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொள்கின்றவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவருடைய வாக்குத்தத்தம். எனவே, அவருடைய வாக்குத்தத்தை பற்றிக் கொண்டு, மனஉறுதியுடன் அவரை கிட்டிச் சேருங்கள். உண்மை மனதோடு தம்மண்டை சேருகிக்னறவர்களுடைய ஜெபத்தை கேட்கின்றார். தாழ்மையுள்ள மனதையுடையவரடகளுக்கு அதிக கிருபையை பொழிகின்றார்.

**ஜெபம்:** வாக்குமாறாத தேவனே, நான் சோர்ந்து போகும் போது, நீர் நன்மை செய்கின்றவர் என்பதிலே நான் உறுதியாய் நிலைத்திருக்கும்படி எனக்கு பெலன் தந்து, உம்முடைய வழியிலே என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஏன் சிலவேளைகளிலே பதில் இல்லை

"ஏன் எங்களுடைய சத்தத்திற்கு பதில் கொடுக்காமல் இருக்கின்றார்" போன்ற சத்தங்கள் சில வேளைகளிலே, சில விசுவாசிகளின் வாழ்விலே தொனிப்பதுண்டு. ஆனால், அன்புள்ள பிதாவாகிய தேவனோ, தாம் தெரிந்து கொண்ட தன்னுடைய ஜனங்களை, தாம் நேசிக்கும் தம்முடைய பிள்ளைகளை நோக்கி: "வானங்களே, கேளுங்கள் பூமியே, செவிகொடு.கர்த்தர் பேசுகிறார் நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன் அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும் இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்." திரளான ஸ்தோத்திர பலிகளை உதடுகளினாலே ஏறெடுக்கின்றார்கள் ஆனால் அவர்கள் இருதமோ தேவனுக்கு தூரமாக இருக்கின்றது. விசேஷ பண்டிகைகளின் நாட்களை ஏற்படுத்தி, தாரளமாக காணிக்கைகளை கொடுத்து, ஓய்வு நாட்களிலே சபையிலே் கூடி வருகின்றார்கள். "நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன் நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும் அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்." என்று தேவனாகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, பிதாவாகிய தேவன்தாமே நம்முடைய தேவைகளை அறிந்திருக்கின்றார். இந்த உலகத்தில் தகப்பன் மார், தங்கள் பிள்ளைகளின் தேவைகளை அறிந்து, பிள்ளைகள் அதை கேட்க முன்னதாகவே அவர்களுக்கு கொடுகின்றார்கள். அப்படியானால், உண்மையாய் தம்முடைய பிள்ளைகளை நேசிக்கின்ற பரம பிதா, உங்களை விசாரிக்கின்றவராய் இருக்கின்றார். நீங்கள் அவருடைய சத்த்திற்கு அறிந்து கொள்ளுங்கள். அவர் பேசும்போது அவருடைய சத்த்திற்கு செவி கொடுங்கள். அப்பொழுது உங்கள் மனதிலே சமாதானம் தங்கும். அவர் உங்கள் வேண்டுதல்களை கேட்கின்றார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். எனவே, தேவனைக் குறித்து குறை கூறுவதை நிறுத்திவிட்டு, அவரவர் தன் தன் வழிகளை ஆராய்ந்து அறிந்து, வேதனை உண்டாக்கும் வழிகள் இருந்தால் அவைகளை விட்டு விலகி கர்த்தரிடத்தில் திருப்ப வேண்டும்.

**ஏசாயா 1:19**

**நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.**

**ஜெபம்**: என்னை வழிநடத்தும் தேவனே, என் வாயிலிருந்து முறுமுறுப்பையும் தர்க்கிப்பையும் நீக்கி, உம்முடைய சத்தத்தை கேட்டு, அதன்படி வாழ்கின்ற ஒரு நல்ல விசுவாசியாக இருக்க எனக்கு கற்றுதந்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சத்தியதினின்று விலகாதபடி பாருங்கள்

"கர்த்தரே தேவனென்று அறியுங்கள் நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார் நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்." என்று சத்திய வேதம் கூறுகின்றது அப்படியானால் விசுவாச மார்க்கத்தாரில் சிலர் ஏன் நல்ல மேய்ச்சலை காணாமல் போகின்றார்கள்? நானே நல்ல மேய்ப்பன் பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக் கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன் ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." என்று நல்ல மேய்ப்பனாகிய ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். அதாவது, மேய்ச்சலின் ஆடுகள் நல்ல மேய்ச்சலைக் கண்டடையும்படிக்கு, தங்களுடைய மேய்ப்பன் யார் என்று அறிந்திருக்கின்றன. அவைகள் தங்கள் மேய்பனுடைய சத்தத்தை கேட்டு அவருக்கு பின்னாக செல்கின்றன. "வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான் ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்று ஆண்டவராகிய இயேசு உவமை வழியாக நல்ல மேய்ப்பன் யார் என்றும், அவரைப் பின்பற்றும் ஆடுகள் எப்படியாக இருக்கும் என்றும் கூறியிருக்கின்றார். எனவே நாம் நல்ல மேய்ச்சலை கண்டடையும்படி, மேய்பனுடைய சத்தம் இன்னதென்று அறிந்து அவரை பின்பற்ற வேண்டும். இந்த உலகத்தின் அந்நிய சத்தங்களை கேட்கும் போது, அதற்கு செவி கொடுக்காமல் இருக்க வேண்டும். அப்பொழுது: "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்" என்று உண்மை மனதோடு அறிக்கை செய்ய முடியும்.

**யோவான் 10:16**

**அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, அந்நிய சத்தங்களை கேட்டு அந்த சத்தங்களை பின்பற்றி அழிந்து போகாதபடிக்கு, உம்முடைய சத்தததை கேட்டு, அதற்கு செவிசாய்த்து உம்மை பின்பற்றி செல்ல எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யாரிடத்தில் போவோம்?

கடந்த சில நாட்களாக, கர்த்தராகிய இயேசு மலைப்பிரசங்கத்தை மை யமாக வைத்து, தேவனிடம் கேட்டு பெற்றுக் கொள்வதைக் குறித்து தியானித்து வருகின்றோம். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னி டத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக்கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கு ம்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண் டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன் மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, தேவனிடத்தில் ஜெபம் செய்வதில் சோர்ந்து போகாதிருங்கள். எனக்கு உடனடியாக பதில் தேவை என்று வேறு வழிகளை தேடலாமோ? “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு அதின் முடிவோ மரண வழிகள்.”. கர்த்தராகிய இயே சுவைத் தவிர நமக்கு வேறொரு வழி இந்த உலகத்திலே இல்லை. நான் பாவம் செய்தேன் எனவே தேவனிடத்தில் சேருவது எப்படி என்று மரிதர்களை நம்பி வேறு வழிகளை தேடலாமோ? “பிரபுக்களையும், இரட்சிக்கத்திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனு டைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான் அந்நா ளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம். யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பி க்கையை வைக்கிறவன் பாக்கியவான்.” எனவே உயர்ந்திருந்தாலும், தாழ்ந்திருந்தாலும், பாவிகளாக இருந்தாலும், நீதிமான்களாக இருந் தாலும், ஆண்டவராகிய இயேசுவை பிரிந்து யாரிடத்தில் போக முடி யும்? நித்திய வாழ்வு தரும் வசனம் அவரிடமே உண்டு. அவர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றைக்கும் கோபங்கொ ண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய் யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக் கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிற தோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

**சங்கீதம் 118:8**

மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், **கர்த்தர்** பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.

**ஜெபம்**: மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கின தேவனே, நான் எப்போதும் எந்த வேளையிலும் உம்மை நம்பியிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதை குறித்து மேன்மை பாராட்டுவேன்

நாம் தேவனுடைய சமுகத்திற்கு செல்லும் போது, மனத்தாழ்மை யோடும், கீழ்படிவோடும் செல்ல வேண்டும். தேவன் பெருமையுள்ளவர் களுக்கு எதிர்த்து நிற்கின்றார். ஏனெனில் அது கிறிஸ்துவின் சிந் தைக்குரியதல்ல. மாறாக, பிசாசானவனே பெருமையுள்ளவனாக இரு க்கின்றான். தேவ சமுகத்திலே நாம் கிறிஸ்துவின் சிலுவையைக் குறி த்து மேன்மை பாராட்ட முடியும். தேவன் நம்மேல் பொழியும் கிரு பையைக் குறித்து நாம் மேன்மை பாராட்ட முடியும். அதைத் தவிர நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நாம் எப்படிப்பட்ட கிரியைகளை நடப் பித்தாலும், அவைகளினாலே நாம் நீதிமான்களாகி விட முடியாது. இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும் படி தேவாலயத்துக்குப் போனார்கள் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியா யக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று, தனக்குள்ளே ஜெபம்பண் ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வான த்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ஏனெனில் தன்னை உயர்த்து கிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த் தப்படுவான் என்று ஆண்டவராகிய இயேசு தாமே, தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்கு றித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார். அதனால், உபவாசம், தசமபாகம் என்பவை அவசியமல்ல என்பது பொருளல்ல. அவைகளை நாம் தேவ வார்த்தைகளின்படி செய்ய வேண்டும். நாம் அவைகளை செய்வதினால், மனதிலே பெருமையடைந்தால், அதனால் என்ன பலன்? எனவே கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவர்களாக, மனத்தாழ்மை யோடும், கீழ்படிவோடும், தேவனிடத்டதிலே சேருவோம். அவன் மனதுருக்கமுள்ள தேவன். தம்மிடத்தில் சேருகின்றவர்களை புறம்பே தள்ளிட விடமாட்டார். உடைந்து உள்ளங்களை தேற்றிகின்றவர். எனவே விசுவாசத்திலே தளர்ந்து போகாமல் முன்னேறிச் செல்லுங்கள்.

**லூக்கா 18:14**

**ஏனெனில் தன்னை உயர்த் துகிறவனெவனும் தாழ்த்த ப்படுவான், தன்னைத் தாழ் த்துகிறவன் உயர்த்தப்படு வான் என்றார்.**

**ஜெபம்**: உள்ளந்தரியங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, என்னுடைய கிரியைகளை குறித்து நான் ஒருபோதும் பெருமையடையாதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை உம்முடைய வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெபமே ஜெபம்

ஒரு குறிப்பிட்ட தேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்த கப்பலானது, ஆழ் சமுத்திரத்திலே சில நாட்கள் சென்றபின்பு, நடுச் சமுத்திரத்திலே கப்பலின் தொலை தொடர்பு சாதனங்களில் ஏற்பட்ட கோளாறினிமித்தம், தகவல் நிலையங்களோடுள்ள தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டது. அந்தக் கப்பலின் மாலுமிகளின் தலைவன், மிகவும் அனுபவிக்கவராக இருந்த போதும், கப்பலை எந்தத் திசையிலே கொண்டு செல்ல வேண்டும், எங்கெங்கெல்லாம் ஆபத்துக்கள் இருக்கின்றது. காலநிலை எப்படிமாறப்போகின்றது என்பதை அறியாதிருந்தார். தன்னை நம்பி, கப்பலேறிய இத்தனை ஜனங்களை எப்படி சென்றடைய வேண்டிய துறைமுகத்திற்கு, அபாயங்கள் இல்லாமல் கொண்டு செல்வேன் என்று கலக்கமடைந்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய விசுவாசக் கப்பலும், பரம தேசத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. அந்த யாத்திரையிலே, தேவனோடுள்ள தொடர்வு இன்றியமையாதது. அந்தத் தொடர்பானது ஜெபத்தின் வழியாக ஏற்படுத்தப்படுகின்றது. அந்த தொடர்பு துண்டி க்கப்பட்டால், நாம் செல்லும் வழியை அறியாதிருப்போம். செல்லும் வழியிலே தொலைந்து போய்விடுவோம். தவறான வழிகளை தெரிந்து கொள்வோம். “கப்பலேறி, கடல்யாத்திரைபண்ணி, திரளான தண்ணீ ர்களிலே தொழில் செய்கிறார்களே, அவர்கள் கர்த்தருடைய கிரியைக ளையும், ஆழத்திலே அவருடைய அதிசயங்களையும் காண்கிறார்கள். அவர் கட்டளையிட பெருங்காற்று எழும்பி, அதின் அலைகளைக் கொந் தளிக்கப்பண்ணும். அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்கு கிறார்கள், அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்துபோகிறது. வெறித்தவனைப்போல் அலைந்து தடுமாறுகிறார்கள் அவர்களுடைய ஞானமெல்லாம் முழுகிப்போகிறது. அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள், அவர்கள் இக்கட்டுக ளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார். கொந்தளிப்பை அமர் த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது. அமைதலுண்டானதினி மித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள் தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்.” (சங்கீதம் 107:23-30). எனவே, ஜெபமே ஜெயம் தரும் என்பதை அறிந்து, தேவனோடுள்ள உறவிலே உறுதியாய் நிலைத்திருங்கள்.

**கொலோசெயர் 4:2**

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்.

**ஜெபம்**: என்னை வழிநடத்தி செல்லும் தேவனே, நீர் இல்லாமல் வெற்றி வாழ்க்கை வாழ முடியாது என்ற சத்தியத்தை உணர்ந்து, நான் எப்போதும் உம்மோடுள்ள உறவிலே நிலைத்திருக்க நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.